# மதமும் இலக்கியமும் : யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம்

# (Religion and Literature: The reign of the Tamil King of Jaffna)

க. அருந்தாகரன்

*சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, கலைப் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*தமிழிலக்கிய வரலாறுகளும் அவை தொடர்பான ஆய்வுகளும் முழுச்சாத்தியப்பாடுகளோடு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் போதுதான் தமிழிலக்கிய வரலாறு என்பது முழுமையின் மைல்கல்லைத் தொடும் என்பது வரலாற்றாய்வாளர்களின் கருத்துக் கணிப்பாகும். கடவுளர்கள், மன்னர்கள், நிலப்பிரபுக்கள், கொடை வள்ளல்கள் என்று தனிமனிதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு மொழிசார்ந்த இலக்கிய வரலாற்றை அனைத்துக் காலங்களுக்கும் ஒருமித்த போக்குடைய ஒற்றைப்படைத் தன்மையான வாசிப்பில் எழுதியிருப்பது என்பது இன்றைய இளம் ஆய்வாளர்களின் மறுவாசிப்பிற்கு வழிகோலுவதாக உள்ளது. அந்தவகையில் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறும் விதிவிலக்காக விலகிச் செல்லாமல் இத்தகைய மறுவாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தச் சூழலுக்குத் தள்ளப்படுகின்றது. இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மேலாதிக்கம் பெற்றுச் செல்வாக்குச் செலுத்தும் ஆதிக்கக் காரணிகளின் பின்புலத்தை புலமை நோக்கோடும் ஆய்வுப் புலத்தோடும் உற்று நோக்கிப் பார்க்கும்போது, எழுதப்படாத பல புதிய புதிரான கருத்துச் சிந்தனை மர்மங்கள் வெளிக்கிளம்பும் என்பது எதிர்பார்ப்பிற்குரியது.இந்தவகையில் குறிப்பாக ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தின் பின்புலத்தை, அக்காலத்தில் நிலவிய ஆதிக்கச் சக்திகளின் பின்னால் புதையுண்டு கிடக்கும் கருத்துப் புதையல்களைக் கட்டவிழ்ப்பதனை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வுக் கட்டுரை எழுதப்படுகின்றது. மதம் - இலக்கியம் என்பவற்றிற்கிடையேயான இடைவினைத் தொடர்பையும், ஊடாட்டத்தையும் உற்று நோக்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் சில மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து,ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு பற்றிய மறுவாசிப்பிற்கான தொடர்ச்சியை உருவாக்குவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

**முதன்மை விளக்கச் சொற்கள்:** இலக்கியம், மதம்,ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு, ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்,புராணம், பள்ளு, காப்பியம், வாய்மொழிக் காப்பியம்

## I. *முன்னுரை:*

தமிழ் இலக்கியப் பயில்பரப்பின் ஒரு பகுதியாக ஈழத்துத் தமிழ் இலக்கியம் அமைகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு இல்லாது தமிழிலக்கிய வரலாற்று ஆய்வுகள் எவையும் முழுமையடையாது என்பது

© 2021, IRJTSR 

யதார்த்தமானது. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு அதன் முழுச்சாத்தியப்பாடுகளோடு இன்னும் எழுதப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவ்வாறு எழுதப்பட்டவற்றுள் அருந்தலான ஒருசில போக, பெரும்பாலானவை மேலெழுந்தவாரியானவையாகவும் அக்காலத்தில் பிரதானப்பட்டு நின்ற கருத்துநிலைகளின் வெளிப்பாடுகளாகவுமே அமைகின்றன. ஈழத்து இனக்குழுக்களின் வரலாற்றை எழுதுவதில் எழுந்த அனர்த்தம் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றுப் புலமை நெறியினையும் பாதித்துள்ளது.

உலகப் பொதுவான பின்புலத்தில் வைத்துப் பார்க்கின்றபோது இன்னும் எழுதப்படாத அல்லது ஒற்றைப்படையான கருத்தியல் அடிப்படையில் கட்டமைப்பது வரலாறாக இருப்பது தமிழ் இலக்கிய வரலாறு என்பது கசப்பான, ஆனால் புலமைச் சிரத்தையோடு ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையும் ஆகும். உண்மையில் மன்னர்களின், நிலப்பிரபுக்களின்,கடவுளர்களின் வரலாறே தமிழ் இலக்கிய வரலாறாகச் சொல்லப்பட்டு வந்திருக்கின்றது.

எமது மரபு பண்பாடு, அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் பாரம்பியம் எனச்சுட்டப்படுபவை இயல்பானவை அல்ல. அவை கட்டமைக்கப்படுபவை. அதிகாரத்தில் இருக்கும் சமூகக்குழுக்கள் இந்தக்கட்டமைப்பைத் தமது அரசியல் உள்நோக்கங்களுக்காக மேற்கொள்கின்றன. விருப்பபூர்வமான தெரிவு, வரிசையாக்கம் என்ற வகையில் இது நிகழ்ந்தேறுகின்றது. இதனால் எண்ணற்ற இனக்குழுக்கள் சார்ந்த இலக்கிய மற்றும் பண்பாட்டு மரபுகள் புறக்கணிக்கப்பட்டு, மேலாதிகக சமூக பண்பாட்டு கலை மரபே தமிழிலக்கியப் பண்பாட்டு மரபாக மாற்றிச் சொல்லப்பட்டு வந்திருக்கின்றது. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில் மேற்படி கருத்து மிகவும் பொருந்தி வருவதை அவதானிக்கலாம். ஈழத்துத் தமிழிலக்கியம் மற்றும் வரலாறு பற்றிய எழுத்துக்கள் பெரும்பாலும் இலக்கிய அரசியல் குறித்து அல்லது இலக்கியத்தின் அரசியல் குறித்துமே பேசியுள்ளன.

### *II. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு:*

தமிழ் நாட்டுக்குச் சற்றும் குறையாத தமிழ் இலக்கிய வரலாற்று தொடர்ச்சியைக் கொண்டதாகக் கருதப்படும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் யாழ்பாணத் தமிழ் மன்னர் காலம் வரை மேற்கொள்ளப்பட்ட கலை இலக்கிய ஆக்கத் தொழிற்பாடுகள் குறித்துத் தெளிவான ஆதாரங்கள் பெரும்பாலும் கிடைக்கவில்லை. இதற்கான அடிப்படைகள் குறித்து விரிவான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவுமில்லை.

வரலாற்றில் முதன்முறையாக ஓரளவு வரலாற்று ஆதாரங்களோடு பேசக்கூடிய சமூகப் பொருளாதார, கலை இலக்கியப் பண்பாட்டுக் கட்டமைப்புக்களைக் கொண்டமையும் காலமாக யாழ்ப்பாண இராச்சிய காலம் விளங்குகின்றது. அதாவது வரலாற்றுப் பிரச்சினையுடன் தர்க்கரீதியான சில அடிப்படைகளோடு இலக்கியம் குறித்துப் பேசுவதற்கான சாத்தியப்பாட்டை இக்காலம் கொண்டிருக்கின்றது.

இருந்தபோதிலும்,இவ்வரலாறானது அக்காலத்தில் நிலவிய எல்லாச் சமூகப் போக்குகளையும்,நோக்குநிலைகளையும் உள்வாங்கி, வெளிப்படுத்துபவையாக இல்லாது கட்டமைக்கப்பட்ட ஒற்றைப்படையான வரலாற்று வெளிப்பாடுகளாகவே அமைந்துள்ளன. இதனை இன்னொரு வகையில் கூறுவதானால், இக்காலத்திற்குரியதாக இனங்காணப்படும் கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு அடிப்படைகள் யாவும் அக்காலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த சமூகக்கருத்து நிலைகளின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளதனை அவதானிக்கலாம். இந்தப்

பின்னணியில் வைத்தே இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களையும் அவற்றின் மத மற்றும் தத்துவ அடிப்படைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இக்காலத்திற்குரியதாக இனங்காணப்படும் இலக்கிய ஆக்கங்கள் பெரும்பாலும் சமய மற்றும் தத்துவக் கருத்துக்களோடு ஊடாடிச் செல்வதனை இனங்காண முடிகின்றது. குறிப்பாக வைதிக மதநிலைப் பாரம்பரியங்களும் கருத்துநிலைகளுமே பிரதானப்பட்டு நிற்கின்றன. இலக்கியம் மற்றும் மத உணர்வு நிலையினூடு அரசியல் கருத்துநிலைகளை உள்ளுறுத்திப் பேசும்போக்கு முதன்மைப்படுத்தப்பட்டு நிற்கின்றது. இதனால் ஏனைய இனக்குழுக்களின் மத மற்றும் இலக்கிய மரபுகள் பண்பாட்டுப் புறத்திகள் (Cultural Others) ஆக்கப்பட்டுள்ளன. இவற்றை திரைவிலக்கிப் பார்ப்பதன் மூலமே இக்காலத்து இலக்கியத்திற்கும் மதத்திற்கும் இடையேயான ஊடாட்டத்தைப் புரிந்து கொள்ள முடியும். அதற்கு மதம் மற்றும் இலக்கியம் குறித்த அறிவுத் தெளிவு அவசியமானதாகும்.

### *III. மதம் - ஒரு நோக்குநிலை*

மதம் என்பது சமூக உற்பத்தி அமைப்பின் ஓர் உப விளைவாகும். சமூக உற்பத்தி பின்தங்கியிருந்த வரலாற்றுக் காலங்களில் மதம் மிகப் பெரும் சக்தியாக இருந்தது. மதம் குறித்து அறுதியிடப்பட்ட விளக்கம் எதனையும் கட்டுவது கடினமானதாகும். அது பற்றிய விளக்கங்களும் புரிதல்களும் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

வர்க்க அடிப்படையில் மதத்தை அணுகியோர் அதனை ஆளும் வர்க்கத்தின் கருத்துநிலை வெளிப்பாடு என்றும் வெகுஜன உளவியல் அடிப்படையில் நோக்கும்போது இன்னல்களுக்கு உள்ளான மக்கள் அவற்றின் வடிகாலாக அதாவது, தமது துன்பங்களுக்கு என்றுமே விடிவு கிட்டாதபோது தமது மனச்சுமையை இறக்கி வைக்கும் ஒரு சுமை தாங்கியாகக் கொள்கின்றனர். தனிமனித உளவியல் வழிநின்று பார்க்கும்போது மதம் என்பது அந்நியப்பட்ட மனிதனின் சாரமாக விளங்குகின்றது. அதாவது இயல்பில் படைப்புத் தன்மை கொண்ட மனிதனின் படைப்புத் திறன்கள் சுரண்டல் சமூகத்தில் களவாடப்பட்டுவிட தான் இழந்துபோன மனிதப் பண்புகளை உருத்திரட்டி கடவுள் என்னும் கருத்தாக்கத்தை உற்பத்தி செய்கின்றான். இதயமில்லாத உலகில் இதயமாக அவனுக்கு கடவுள் தோன்றுகிறார். தத்துவரீதியில மதம் என்பது கருத்து முதல்வாதத்தின் ஜனரஞ்சக வடிவமாக வெளிப்படுகின்றது. சமூகவியல் அடிப்படையில் நோக்கும்போது மதம் என்பது ஒரு சமூக நிகழ்வு. அது ஒரு சமூக நிறுவனம். மதத்தின் எல்லாக் கூறுகளுமே சமூக வாழ்வில் உருவானவை. மதத்தின் வரலாற்றுக்குள் சமூக வர்ககங்களின் நலன்கள், அவற்றிற்கிடையேயான மோதல்கள், மாற்று முயற்சிகள் ஆகியவற்றைக் காணமுடியும் என்கின்றனர்.

மதம் பற்றிய கால்மாக்ஸின் பின்வரும் கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

> “மனிதன் என்று சொல்லுகையில் மனிதனின் உலகம் அரசு, சமுதாயம் என்பதாகும். இந்த அரசு, இந்தச் சமுதாயம் சமயத்தை தலைகீழாக்கப்பட்ட உலக உணர்வை உருவாக்குகிறது. அதற்குக் காரணம் அவையே தலைகீழான உலகமாக இருப்பதுதான். சமயம் என்பது இந்தத் தலைகீழ் உலகம் பற்றிய பொதுவான கோட்பாடு, அதனுடைய அறிவுக்களஞ்சியத் தொகுப்பு,ஜனரஞ்சக வடிவங்களினூடாக வெளிப்படும் அதன் தர்க்கநெறி விளக்கம், அதன் ஆன்மிகத்தின் உச்சம், அதன்

> உற்சாகம், அதற்கான தார்மீக ஒப்புதல், அதனை முழுமையடையச் செய்வது, அதனை நியாயப்படுத்தவும் தேற்றவும் உதவும் உலகு தழுவிய விளக்கம், சமயம் என்பது மனிதசாரத்தை அதிக கற்பனையில் எய்துவதாகும். ஏனென்றால், மனிதசாரத்தை யதார்த்தத்தில் எய்த முடிவதில்லை. சமயத்தில் வெளிப்படுத்தப்படும் அவலம் ஒரு பக்கம் உண்மையிலேயேநிலவும் அவலத்தின் வெளிப்பாடாகும். மற்றொரு பக்கத்தில் இந்த உண்மையான அவலத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரலுமாகும். சமயம் என்பது ஒடுக்கப்பட்ட ஜீவனின் பெருமூச்சு, இதயமற்ற உலகிற்கு ஓர் இதயக்கனிவு, சத்தற்ற வாழ்வில் ஒரு சத்து, அது மக்களுக்கு வாய்த்த ஓர் அபின்.''

மதம் என்பது கோட்பாடுகள், ஐதீகங்கள், ஒழுக்க நெறிப் போதனைகள், சடங்குகள், சமூக நிறுவனங்கள், மத அனுபவம் தரும் உந்துதல்கள் அல்லது இயக்கப்பாட்டு உயிர்ப்பு முதலான ஆறு பரிணாமங்களைக் கொண்டதாகக் கூறுவர்.

இவ்வம்சங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கும், பேணப்படுவதற்கும் கையளிக்கப்படுவதற்குமான ஊடகமாக இலக்கியத்தை நம்பியிருக்க வேண்டும். அந்த இலக்கியம் வாய்மொழி நிலைப்பட்டதாகவோ அல்லது எழுத்து மொழி நிலைப்பட்டதாகவோ இருக்கலாம். உண்மையில் மதம் தரும் அனுபவத்தை வெளியிட இலக்கியமே வாய்ப்பான ஊடகமாக அமைந்து விடுகின்றது. மதமின்றி இலக்கியம் இருக்க முடியும். இருக்கிறது. ஆனால் இலக்கியமின்றி மதம் இயங்க முடியாது.

மதம் அடிப்படையில் நம்பிக்கைகள், சடங்குகள், ஐதீகங்கள் இவற்றினிடையாக வளர்த்ததெடுக்கப்படும் சமூக நோக்கு நிலை ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்றது. இவை மூன்றும் ஒன்றிணையும்போதுதான் மதம் தொழிற்படத் தொடங்குகின்றது. இவற்றைப் பண்பாட்டிலிருந்தும் இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது. மதத்திற்கு இலக்கியம் அத்தியாவசியமான வெளிப்பாட்டு ஊடகமாக மாறிவிடுகின்றது. இங்கேதான் இலக்கியம் பற்றிய கேள்வி எழுகின்றது.

### *IV. இலக்கியம் - ஒரு நோக்குநிலை*

இலக்கியம் பற்றிக் காலத்திற்குக் காலம் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளபோதும், அடிப்படையில் அது ஒரு மொழிவழிக் கலையாகும். அது மொழியை ஊடகமாகக் கொண்டு வெளிப்படுத்துகின்றது. மொழியை அடிப்படையாகக் கொண்டபோதும் சொல்லால் சொல்லுக்கு அப்பால் இயங்குவதும், மொழியின்சாத்தியப்பாடுகளை, எல்லைகளை எல்லையற்று விரித்துச் செல்வதுமே அதன் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது.

இலக்கியம் அதன் உள்ளடக்கம், வெளிப்பாட்டு முறை முதலிய அம்சங்களில் வேறுபட்டாலும் சமூக உருவாக்கத்திற்கும் அதன் நிலைபேற்றிற்கும் இருப்பிற்கும் அவசியமானது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இலக்கியம் சமூக உற்பத்தியாகத் தோன்றி, அச்சமூகத்தை உற்பவிப்பதுமாகவும் இருப்பதனால்,ஒரு சமூகம் நிலைபேறுடைய நிறுவனமாக இயங்குவதற்கும்,இயங்கி வந்தது என்பதனை அறிந்து கொள்வதற்கும்இன்றியமையாததாகும்.

இலக்கியம் சமூக உணர்வுகளையும் அச்சமூக சீவிகளான மக்களின் வாழ்க்கையின் அடியாகத் தோன்றும் உணர்ச்சிகளையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் மொழிக் குறியீடு கொண்டு வெளிப்படுத்துகின்றது. உணர்ச்சிகள் சமூகத்தின் அடியாகத் தோன்றுபவை. சமூகத்தின் அடியாகத் தோன்றும் சமூக உணர்ச்சிகளுள் மத அனுபவம் தவிர்க முடியாத ஒன்றாக வரும். மத அனுபவ வெளிப்பாடு தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை வளப்படுத்தி வந்துள்ளதனை அவதானிக்க முடியும்.

***V. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறும் யாழ்ப்பாணத்தமிழ் மன்னர் காலமும்:***

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை அதன் வரலாற்றுத் தொடர்ச்சியில் வைத்துப் பார்க்கின்றபோது பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இலக்கியம் பற்றிய சிந்தனையை நெறிப்படுத்துவதில் மதம் பற்றிய கருத்துநிலைகள் பிரதானப்பட்டு வந்துள்ளதனை அவதானிக்கலாம். ஈழத்தைப் பொறுத்தவரையில் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் முதலான மதநெறிகள் பயில்நிலையில் இருந்தபோதும் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் நிலவிய அரசியல் பொருளாதார சமூகச் சூழல் வைதிக நெறிப் பாரம்பரியங்களையும் அதுசார்ந்த கலை இலக்கியப் பண்பாடுகளையுமே முதன்மைப்படுத்தி வந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

இந்திய சமய வரலாற்றை ஆராய்ந்த ஆய்வாளர்கள் சிலர் அதற்கு இரட்டைத் துவக்கம் உண்டு என்று விளக்கினர். ஒன்று சிந்துவெளி நாகரிகத்தில் இருந்து தொடங்கும் தாய்த்தெய்வ வழிபாட்டு தாந்திரீக மரபு, மற்றது ஆரிய இனக்குழுக்களில் இருந்து தொடங்கும் வைதிக மரபு. இது தாந்தீரிகத் தளங்களை (பெண், அடித்தள மக்கள் பொருளுலகு) தீட்டு என்றும் மாயை என்றும் அறிவித்தது. இத்தகைய இரண்டு போக்குகளுமே ஆரியச் சக்கரவர்த்திகள் கால மத மற்றும் தத்துவ நெறிகளினூடு ஊடாடிச் செல்கின்றது.

தென்னிந்திய அரசியல் பொருளாதாரத் தொடர்பு, கலிங்க மாகனின் படையெடுப்பு, சுமார் முந்நூற்றியம்பது ஆண்டு கால ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி என்பன வைதிக மரபின் செல்வாக்கிற்குக் காரணமாயின. இதனால் இக்காலத்தில் தோன்றிய கலை இலக்கிய வெளிப்பாடுகள் பெரும்பாலும் வைதிக மத மற்றும் தத்துவ அடிப்படைகளைக் கொண்டனவாகவே மேற்கிளம்பின. ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கிய முயற்சிகளைத் தொகுத்து நோக்கும்போது இதனை நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியதாகக் கொள்ளப்படும் சரசோதி மாலையுடனேயே பிரக்ஞைபூர்வமான இலக்கியஆக்க முயற்சிகள் ஈழத்தில் இடம் பெறத் தொடங்குகின்றன. இவற்றை வகைப்படுத்தி நோக்குவதில் இலக்கிய வரலாற்று ஆய்வாளர்களிடையே கருத்துவேறுபாடுகள் நிலவி வந்தபோதும் அவற்றை அவற்றின் உள்ளடக்க அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சோதிடம், வைத்தியம் முதலான பாரம்பரிய நூல்கள்
2. வரலாற்றுப் பதிவுகள்
3. காவியம், புராணம், பள்ளு முதலிய ஆக்க இலக்கியச் செயற்பாடுகள்

**1. பாரம்பரிய அறிவியல் நூல்கள்:**

பாரம்பரிய அறிவியல் நூல்கள் பாரம்பரிய அறிவியல் மற்றும் வரலாற்றுப் பதிவுகளைப் பொதுநிலையில் இலக்கியமாக சுட்டப்பட்டாலும் உண்மையில் அவற்றைக் கலையாக்கச் செயற்பாடுகளாகக் கொள்ளமுடியாது. இலக்கிய முறை (செய்யுள்) எடுத்துரைப்பின் மூலமான பாரம்பரிய அறிவியல் கருத்து வெளிப்பாடுகளாகவும் வரலாற்று மூலங்களாகவுமே அவை விளங்குகின்றன.

பாரம்பரிய அறிவியல் நூல்களாக சரசோதிமாலை, செகராசசேகரமாலை பரராசசேகரம் செகராசசேகரம் முதலியன இடம்பெறுகின்றன. இவை வடமொழியில் தன்வந்திரி மற்றும் வாப்படரின் வாகடம் போன்றவற்றின் தழுவல் மொழிபெயர்ப்புக்களாகவே விளங்குகின்றன.

வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் என்பன ஒன்றொடு ஒன்று தொடர்புடைய அறிவுத்துறைகளாக விளங்குகின்றன. இத்தகைய அறிவியலை முதன்மைப்படுத்துவதன் மூலம் அதிகாரத்திலுள்ள சமூகக் குழுக்கள் தமக்குத் தெய்வீக ஆற்றல் உள்ளதாகக் காட்டப்படுகின்றது. இதன்மூலம் அவர்களுக்கு இருக்கும் சிறப்புரிமையை உறுதி செய்து நிலைநாட்ட உதவுகின்றது. உண்மையில் ஆரியச் சக்கரவர்த்திகள் கால அரச உருவாக்கம் அதன் நிலைபேற்றிற்கான கருத்தியல் தேவை என்பவற்றின் தர்க்கரீதியான வெளிப்பாடுகளாகவே இவை அமைகின்றன.

**2. வரலாற்றுப் பதிவுகள்:**

இக்காலத்தில் தோன்றிய மிக முக்கியமான பிரதிகளாக வரலாற்றுப் பதிவுகள் அமைகின்றன. வையாபாடல், கைலாயமாலை, கோணேசர் கல்வெட்டு ஆகியன இந்த வகையைச் சார்ந்தன. குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் தமது சமூக நிலைப்பாடு குறித்தும் அதன் புவிசார் சூழல் குறித்தும் சிந்திக்கத் தொடங்கும்போது வரலாற்று உணர்வு ஏற்படுகின்றது. அதாவது தம்மை நிலையான ஒரு குழுவினராகக் கொள்ளும் பிரக்ஞை ஏற்படும் போதுதான் வரலாறு தோன்றும். இது ஆட்சியாளரின் வர்க்க நிலைப்பட்ட உணர்வாக முகிழ்க்கும் என்பர். இந்தப் பின்னணியில் வைத்தே இவ்வரலாற்றுக் காலங்களை விளங்கிக்கொள்ள வேண்டும். உடன் நிகழ்காலத்தில் எழுந்த அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான கருத்துநிலைகளையும் பண்பாட்டுத் தளத்தைக்கட்டமைப்பதற்குமான பணியினையும் இவை நிறைவேற்றுகின்றன. இந்நூல்களின் தோற்றத்திற்கான அடிப்படை குறித்து பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கூறும் பின்வரும் கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

> “தகராறு இருந்து உரிமை நிறுவப்படும்போது உறுதி எழுதி வைக்கும் எண்ணம் ஏற்படுகின்றது. இலங்கை வரலாற்றுத் தொடக்க காலத்தில் தகராறு இருந்தது. உரிமை பெற்ற சிங்களவரிடையே தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பன தோன்றின. இடைக்காலத்திலே தகராறு இருந்து உரிமை பெற்ற தமிழரிடையே கைலாயமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு முதலியன தோன்றின.”

**3. இலக்கிய ஆக்கங்கள்:**

இக்காலத்தில் தோன்றியவற்றுள் கலைச் சாத்தியப்பாடுடைய ஆக்கத் தொழிற்பாடுகளாக காப்பியம், புராணம், பள்ளு, முதலிய இலக்கிய வடிவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றுள் புராணங்கள் முக்கிய அவதானத்திற்கு உரியவையாகின்றன. இந்தவகையில் தக்ஷிண கைலாய புராணம், திருக்கரசைப் புராணம்,

வியாக்கிரபாத புராணம் என்பன முக்கியமானவை. இவற்றுள் தக்ஷிணகைலாய புராணம் மற்றும் திருக்கரசைப் புராணம் முழுப்பிரதிகளும் கிடைக்க, வியாக்கிரபாத புராணத்தின் ஒரு சில பகுதிகளே எஞ்சியுள்ளதென்பர்.

இப்புராணங்களைப் பற்றிய அடிப்படைகளை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், தமிழ் நாட்டில் புராண இலக்கியங்கள் தோன்றிய காலத்துடன் இவற்றை சூழமைவுபடுத்தி நோக்க வேண்டும். தமிழ் நாட்டில் இக்காலத்தில் அதிகமாக தோன்றிய இலக்கிய வடிவமாக புராணங்கள் காணப்படுகின்றன. காவியச் சீர்குலைவைச் சீர்செய்யவும், ஸ்திரப்படுத்தவும் புராணங்கள் தோன்றின. பொருளாதாரத்தில் நிலவிய தேக்கமும், அமைதியற்ற சூழலும், அற்புத உணர்ச்சிகளும், காவிய இரசனையும் குன்றி சமய உணர்வு மிகுதியாகிப் போன தன்மையும் வடமொழி இலக்கியங்களைக் கற்றுத்தமிழில் வடிக்கின்ற உணர்வு குன்றியமையும் காவியகாலம் ஒடுங்குவதற்குக் காரணம் என்பர். அக்காவியங்களின் ஒடுங்கு தசையாகவே புராணங்கள் தோன்றின.

இதைவிட இக்காலத்தில் கோயில்களின் தேவை அதிகமாக இருந்தது. கோயில்களைப் பாதுகாக்க கோயில் பற்றிய தொன்மக் கதைகளின் தேவை என்பனவும் புராணமாக வெளிவருகின்றன. இதைவிட மத நம்பிக்கை என்ற போர்வைக்குள் வரலாற்றைத் திணித்துக் கூறுவது ஒரு மரபு. இந்திய புராண இலக்கியங்களின் உட்கிடக்கையை ஆராய்ந்த ராய்சௌத்ரி போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இதனை எடுத்துக் காட்டியுள்ளனர்.

தமிழ் நாட்டில் புராணங்கள் தோன்றஏதுவான அரசியல் சமூக பொருளாதார மற்றும் சமய பண்பாட்டு காரணிகளே ஈழத்திலும் புராணங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தன. சோழர் ஆதிக்கத்தின் முடிவு, பௌத்த சிங்கள எழுச்சி, இஸ்லாமிய படர்ச்சி மற்றும் கிறிஸ்தவத்தின் வருகை முதலான சவால்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் ஈழத்துச் சைவத் தமிழ்ப் பண்பாடு இருந்தது. இந்தநிலையில் இந்துக்கள் தத்தமது இருப்பையும் பண்பாட்டு உணர்வையும் பிரதேச நிலையில் பேணிக்கொள்ள முற்பட்ட நிலையில் அத்தேவையை நிறைவு செய்யும் முக்கிய இலக்கிய வகையாகப் புராணங்கள் தோன்றியுள்ளன. உண்மையில் தமிழகத் தல புராணங்களின் தொடர்ச்சியாகவே ஈழத்துப் புராணங்களும் தோற்றம் பெற்றன;பெறுகின்றன எனலாம்.

இப்புராணங்கள் யாவும் வடமொழிப் புராணக் கதைகளின் சாரமாகவே அமைகின்றன. தக்ஷிணகைலாய புராணம் மற்றும் வியாக்கிரபாத புராணம் என்பன முறையே வடமொழி மச்சேந்திர புராணம் மற்றும் வியாக்கிரபாத மான்மியம் என்பவற்றின் தழுவல் மொழிபெயர்ப்புக்களே ஆகும்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியின் தன்மை காரணமாக ஆட்சியதிகாரம் மற்றும் இருப்புப்ப பற்றிய கேள்விகள், நெருக்கீடுகள் இருந்து வந்துள்ளன. பல்வேறு அதிகாரத்தலையீடுகள் இடம்பெறுவதற்கான வெளி உருவாகியபடியே இருந்தது. இந்த நிலையில் இவர்களுக்கான அதிகார இருப்பை, நிலைபேற்றைக் கோயில்கள் வழங்கின. ஆட்சியாளர்களுக்கும் கோயில்களுக்கும் இருந்த உறவு காரணமாக அவை முன்னர் பெற்றிருந்த சமூக முக்கியத்துவத்தை இழந்து ஆட்சியாளர்களுக்கான அரசியல் கருவிகளாயின.

இக்காலத்தில் தோன்றிய காவிய வெளிப்பாடாக இரகுவம்சம் அமைகின்றது. காளிதாசர் வடமொழியில் இயற்றிய ‘ரகுவம்ச’ மகாகாவியத்தின் ஆக்கமீளாக்கமாக (தழுவலாக) அமையும் இதனை, யாழ்ப்பாண அரசர் குலத்தைச் சேர்ந்த அரசகேசரி இயற்றினார். இராமன் பிறந்த குலமரபின் சிறப்புரைக்கும் இக்காவியம், அடிப்படையில் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசுருவாக்கக் கருத்தியலுடன் தொடர்புடையதாகவும் அமைகின்றது. ஆரியச்

சக்கரவர்த்திகள் பாண்டிய மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தனியாட்சி செய்யத் தொடங்கியதும், யாழ்ப்பாண மக்களின் விசுவாசத்தைப் பெறுவதற்காகத் தமது குலத்திற்குத் தெய்வீகத் தொடர்பு பற்றிக் கற்பிக்க முனைகின்றனர். பேரரசுகள் எழுச்சி பெற்ற காலப்பகுதியில் மன்னர்களின் ஆட்சி உரிமைகளை நியாயப்படுத்துவதற்காக அவர்கள் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூவருள் ஒருவர் மரபில் வந்தவர்கள் என்று எடுத்துக்காட்டி நம்பவைக்கும் முயற்சி வட இந்தியாவில் தோன்றியது. இப்பின்னணியில் வைத்தே இரகுவம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதைவிட சிலப்பதிகாரக் கதையை ஈழத்துப் பிரதேசக் குணப்பண்புகளோடு எடுத்துக் கூறும் வாய்மொழிக் காப்பியங்கள் முக்கிய கவனிப்புக்குரியன. முழு வளர்ச்சி பெற்ற காவியங்களுக்கான தொடக்கநிலைப் பண்புகளைக் கொண்டமைவதும், வாய்வழி ஆற்றுகைக்கான பிரதேசச் சாத்தியப்பாடுகளைக் கொண்டமைவதும், தான் வழங்கி வரும் பிரதேசக் குணப்பண்புகள் மற்றும் பண்பாட்டு அடிப்படைகளை எடுத்துணர்த்தும் குறிகாட்டியாகவோ ஆக்கச்சுட்டியாகவோ அமைவதனை வாய்மொழிக் காப்பியம் எனலாம்.

சிலப்பதிகார மூலக்கதையைத் தழுவி ஈழத்தில் தோன்றிய வாய்மொழிக் காப்பியங்கள் மூன்று ஆகும். இவை முறையே மட்டக்களப்பில் ‘கண்ணகி வழக்குரை’ என்றும் யாழ்ப்பாணத்தில் ‘கோவலனார் கதை’ என்றும் வன்னிப் பிரதேசத்தில் (முல்லைத்தீவில்) ‘சிலம்பு கூறல்’ என்றும் வழங்கி வருகின்றன.

சிலப்பதிகாரத் தொடர்நிலைச் செய்யுளுடன் ஒப்பிடும்போது கதையின் தொனிப்பொருள், பாத்திர உருவாக்கம், இலக்கியக் கட்டமைப்பு, அதன் வெளிப்பாட்டு முறை முதலிய அம்சங்களில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகளையும் கொண்டமைந்துள்ளது. ஈழத்து மக்களிடையே நிலவி வரும் கண்ணகி வழிபாட்டு மரபினடியாகத் தோன்றி நிலைபெற்று வருகின்றது. மானுடப் பெண்ணொருத்தி தனது கற்பின் திறத்தினால் தெய்வநிலைக்கு உயர முடியும் என்பதைச் சிலப்பதிகாரம் சுட்ட, தெய்வமே மானுடப் பெண்ணாக அவதரித்ததாக கண்ணகி வழக்குரை முதலான வாய்மொழிக் காப்பியங்கள் விபரிக்கின்றன. ஆக,ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிலவிய தாந்திரிக வழிபாட்டு அடிப்படைகளே இக்காப்பியங்களின் ஊற்றுக்கால்களாக அமைகின்றன என்பது இங்கு அவதானிக்கத்தக்கது.

இதைவிட ஈழத்தில் தோன்றிய பள்ளு இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் கதிரைமலைப் பள்ளு இக்காலத்திலேயே தோற்றம் பெற்றுள்ளது. கதிர்காமக் கந்தனைக் கதைத்தலைவனாகக் கொண்ட இப்பள்ளு விவசாய நிலவுடைமையாளன் ஒருவனையும், அவனது பண்ணையாளன், இரு பள்ளியர்கள் முதலானவர்களைக் கதைமாந்தர்களாகக் கொண்டு அவர்களது உணர்ச்சி மெய்ப்பாடுகளை வாய்மொழி மற்றும் ஆற்றுகைச் சாத்தியங்களோடு எடுத்து விளக்குகின்றது. வன்னிப் பிரதேச விவசாயச் சூழல் ஒன்றினை எம்முன் விரிப்பதன் மூலம் இப்பிரதேசத்தின் தனித்துவத்தையும் அம்மன்னர்களின் குணப்பண்புகளையும் வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. முல்லையும் மருதமும் மயங்கிய வன்னிப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலில் வாழும் மக்கள் விவசாயம் முதலான தமது பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தையும் இயற்கையை நம்பியே மேற்கொள்கின்றனர்.

இந்த நெருக்கடியான சூழல் முழுவதினதும் அனுபவத்துடன் இணைந்து போவதற்கான பண்பாட்டுக் கருவியாகவும் நெருக்கீடுகளைக் கடந்து செல்வதற்கான வழியாகவும் மதம் கொள்ளப்படுகின்றது. இந்த

உணர்வுநிலையே இலக்கியத்துக்கு இட்டுச் செல்கின்றது. இதனால் மதம் சார்ந்த இலக்கியங்கள் தோன்றுகின்றன. உண்மையில் வனம் சார்ந்த சூழலில் மக்களுடைய வாழ்க்கையினது அடிப்படையாக மதம் ஊடாடிச் செல்கின்றதென்பதையே இவ்விலக்கிய வெளிப்பாடுகள் உணாத்துகின்றன.

### VI. *முடிவுரை:*

இறுதியாக இக்காலத்தில் தோன்றிய இலக்கிய வெளிப்பாடுகள் யாவும் வைதிக மற்றும் தாந்திக மதப்பண்பாட்டு மரபுகளையே அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன என்பது தெளிவாகின்றது. பௌத்தம், இஸ்லாம் முதலிய மதப் பண்பாட்டு அடிப்படைகளைக்குறித்த செய்திகளை இக்காலத்தில் தோன்றிய எழுத்துக்களின் மூலம் அறிய முடிந்தாலும், அவற்றைப் பிரதானப்படுத்திய ஆக்கங்கள் எவையும் ஆய்வுக்குக் கிடைக்கவில்லை. இதனை ஒரு தற்செயல் நிகழ்வாகப் பார்க்க முடியாது என்பதும் சிந்தனையின் பாற்பட்டதாகும்.

அநுராதபுர அரசின் வீழ்ச்சி, பொலநறுவையில் சோழர்களின் எழுச்சி, பின்னர் ஏற்பட்ட கலிங்க மாகனின் படையெடுப்பு, வன்னிமைகளின எழுச்சி முதலியனவும், சங்கிலிய மன்னன் போன்றவர்கள் சிங்கள மக்களுக்கும், பௌத்த வழிபாட்டு இடங்களுக்கும் எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் சைவம் அதீத செல்வாக்குப் பெற்றிருந்தமை முதலிய காரணிகள் பௌத்த மற்றும் இஸ்லாம் மதங்கள் வடபகுதியில் போஷிப்பின்றி சீரழிய வழிவகுத்தது. இப்போக்கே இவற்றைப் பண்பாட்டுப் புரட்சிகளாக்கித் தேசிய மற்றும் பண்பாட்டுப் புரிதல்களைத் திசை திருப்பியிருக்கின்றது.

இவ்விலக்கியங்களில் ஊடாடிச் செல்லும் மத அனுபவங்களைக் கூர்ந்து நோக்கும்போது, அதிகாரம் சார்ந்தது மற்றும் மக்கள் நிலைப்பட்டது என்ற இரு போக்குகள் பிரதானப்பட்டு நிற்பதனை அவதானிக்கலாம். அதிகாரம்சார் வைதிக சமயக் கோட்பாட்டு முறைகள், அரசின் கோட்பாடுகள் மற்றும் கருத்துநிலைகளின் கீழ்வந்து ஆதிக்கத்தை நியாயப்படுத்த கட்டமைக்கப்பட்டிருக்கின்றன என்பதும், வெகுஜனங்களுக்கிடையே தன்னியல்பாகத் தோன்றும் நாட்டுப்புற மற்றும் தாந்திரிக் நிலைப்பட்ட சமயக் கோட்பாட்டு முறைகள் துன்பத்துக்குள்ளான மக்களுக்கு ஆறுதல் தருவதுடன், ஒடுக்குதலுக்கு எதிரான குரலாக ஒலிக்கவும் செய்தது என்பதனையும் இங்கு அவதானிக்க முடிகின்றது. எனினும், புதிய வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது அதனுடன் தொடர்புடைய சமயக் கோட்பாட்டுமுறையானது அதிகாரநிலைக்கு உட்பட்டதாகி, அதன் தன்மையை மெல்ல இழந்து வருவதையே ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கிய மற்றும் மத அனுபவங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

### *துணை நூல்கள்:*

[1] பத்மநாதன், சி., 2004,ஈழத்து இலக்கியமும் வரலாறும், கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

[2] சிற்றம்பலம்,சி. க.,1992, யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

[3] சிவத்தம்பி, கா., 1987,ஈழத்தில் தமிழிலக்கியம், சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.

[4] சிவத்தம்பி, கா., 2001, தமிழிலக்கியத்தில் மதமும் மானிடமும், சென்னை: மக்கள் வெளியீடு.

[5] தொம்சன் ஜோர்ஜ், 1981, கேசவன், கோ., (மொ.பெ), மனித சமூகாசாரம்,

[6] தோத்தாத்திரி, எஸ்., 200, மாக்சிசமும் மதமும்,